செய்தி வெளியீடு **நாள்: 06.02.2026**

சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 30 முதல்வர் படைப்பகங்களும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 8 முதல்வர் படைப்பகங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

திரு.வி.க. நகர் தொகுதியில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் ஓட்டேரி, சுப்புராயன் தெரு, "முதல்வர் படைப்பகம்", மங்களபுரம் "முதல்வர் படைப்பகம்", புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் "முதல்வர் படைப்பகம்" மற்றும் பட்டாளம், பக்தவச்சலம் பூங்காவில் கட்டப்பட்டு வரும் "முதல்வர் படைப்பகம்", என
4 முதல்வர் படைப்பகங்களையும் இம்மாதம் 20ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கும், கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் அரப்பணிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (6.2.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, ஓட்டேரி, சுப்புராயன் தெரு "**முதல்வர் படைப்பகம்**", பெரம்பூர், ஜமாலியா, மங்களபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மேம்படுத்தப்படும் "**முதல்வர் படைப்பகம்**", புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் புதிய காலனியில் கட்டப்பட்டு வரும் "**முதல்வர் படைப்பகம்**" மற்றும் பட்டாளம், பக்தவச்சலம் பூங்காவில் கட்டப்பட்டு வரும் "**முதல்வர் படைப்பகம்**" என 4 முதல்வர் படைப்பகங்களின் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டமான **முதல்வர் படைப்பகங்கள்** இன்று ஆள் போல முளைத்து, அருகு போல பெருகிக் கொண்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் மட்டும் **38 முதல்வர் படைப்பகங்கள்** உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதில் 8 பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பிலும், 30 சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பிலும் கட்டப்பட்டு வருகின்றன.

இன்றைக்கு நம்முடைய சுப்பராயன் தெருவிலும், அதேபோல் கிருஷ்ணதாஸ் பகுதியிலும் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகங்களையும், புளியந்தோப்பு கரிகாலன் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்தையும், பட்டாளத்தில் கட்டப்பட்டு வரும் படைப்பகத்தையும் இன்று காலை ஆய்வு மேற்கொண்டுள்ளோம். இந்த நான்கு படைப்பகங்களையும் வரும் 20ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு, குறிப்பாக கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் ஒப்படைப்பதற்கான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த பணிகளுக்கெல்லாம் எங்களுடன் இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கிய மாநகராட்சி பணியாளர்களாக இருந்தாலும் சரி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பணியாளர்களாக இருந்தாலும் சரி, தோளோடு தோள் நின்று செயல்பட்ட பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா அவர்களும், எப்போதும் எங்களுடன் களத்தில் நிற்கும் ஆர்.டி.சி திரு.கௌஷிக் அவர்களும், மண்டலக் குழுத் தலைவர் அன்பிற்கினிய திருமதி.சரிதா மகேஷ்குமார் அவர்களும், முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் அன்பிற்கினிய

திரு.தமிழ்வேந்தன் அவர்களும், திரு.புஷ்பராஜ் அவர்களும், வட்ட செயலாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களும் இணைந்து இன்றைய ஆய்வுப் பணிகளை மேற்கொண்டோம்.

தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகளையும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து, தேர்தல் அறிவிப்புக்கு முன்பாகவே மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

இந்த மக்கள் நலப் பணிகளுக்கு எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், சிஎம்டிஏ உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களும், சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அன்பிற்கினிய திரு.குமரகுருபரன் அவர்களும் முழு ஒத்துழைப்பை வழங்கி வருவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஃபர்ஹத் பேகம், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.சொக்காலிங்கம், செயற்பொறியாளர் திரு.சரவணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி.தமிழ்ச்செல்வி, திரு.சரவணன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு.தமிழ்வேந்தன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™